விலை சதம் 25 Registered as a Newspaper in Sri Lanka ★ ★

# ஈழநாடு

மலர் 16 The Eelanaadu இதழ்: 152

யாழ்ப்பாணம் ஆனி 31 ஹி. ஆகிர் 24 திங்கட்கிழமை 15-7-74

JAFFNA COLLEGE 25 JUL 1974 POSTGRADUATE LIBRARY

சிக்மா பம்புகள்

2 அங். ஜூனியர் பர்மிட் உள்ளவர்களுக்கு உடனே கிடைக்கும்.

கொன்ட்ராக்ஸ் அன் சப்ளைஸ் (மனுபக்ரரிங்) லிமிட்.

199, வக்சால் வீதி, கொழும்பு.

தொலைபேசி: 24312 181

அம்பாறை தொழில்நுட்ப நிலைய

# தமிழ் மாணவர்கள் நாளை வகுப்புக்குச் செல்வர்

யாழ்ப்பாணம், திங்கள்

வகுப்புகளை பகிஷ்கரித்து வந்த அம்பாறை தொழில் நுட்பக்கல்லூரியைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை வகுப்புகளுக்குத் திரும்புகிறார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி பிரதம மந்திரிக்கும், கல்வி மாஅதிபருக்கும் அனுப்பி வைத்துள்ள தந்திகளில் பிரதமரின் வேண்டுகோளுக்கிணங்க பிரஸ்தாப மாணவர்கள் நாளை செவ்வாய்க்கிழமை வகுப்புகளுக்குத் திரும்புவதாகத் தெரிவித்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம் முனீஸ்வரன் ஆலயத்துக்கு அண்மையில் கூடி குறிப்பிட்ட மாணவர்கள் தங்கள் நிலை குறித்து ஆராய்ந்த பின்னர் வகுப்புகளுக்குத் திரும்புவதாகத் தீர்மானித்தனர். கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் உள்ள சம்பந்தப்பட்ட தமிழ் மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள தந்திகளில் தாங்கள் ஞாயிறு இரவு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுவதாகவும், திங்கட்கிழமை சகமாணவர்களை மட்டக்களப்பில் சந்திக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

அம்பாறை தொழில் நுட்ப நிலையத்தில் தமிழ்ச் சங்கம் அமைத்தது தொடர்பாக எழுந்த சச்சரவில் தமிழ் மாணவர்கள் பலர் தாக்கப்பட்டது தெரிந்ததே. இதனைத் தொடர்ந்து இவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வந்தனர். இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் பிரதமர் உறுதி கூறியதைத் தொடர்ந்து இவர்கள் கல்லூரிக்குத் திரும்புகின்றனர்.

[தெல்லி. நி-ஈ]

## அனுரா நாடு திரும்பினார்

கொழும்பு, ஞாயிறு

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வாலிப முன்னணி அமைப்பாளரும் பிரதமரின் புதல்வருமான திரு. அனுரா பண்டாரநாயக்கா இன்று நாடு திரும்பினார். சீனா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் விஜயம் செய்த அனுரா கட்டுநாயக்கா விமானநிலையம் வந்து சேர்ந்தார்.

## நிராகரித்தது

புங்குடுதீவு, ஞாயிறு

வடமாகாண ஆசிரிய சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்ற போது பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"1973-ம் ஆண்டு நடந்த வடமாகாண ஆசிரிய சங்கச் செயற்குழுக் கூட்டத் தீர்மானத்தின்படி, இச்சங்க அங்கத்தவர்களான திருவாளர்கள் ஆர். மகேந்திரன், என். சந்தியாம்பிள்ளை, என். சண்முகரத்தினசர்மா, எஸ். பேராயிரம்பிள்ளை ஆகியோருக்கெதிராகவும் பிரஸ்தாப சங்க சகாய நிதிக்கெதிராகவும் முன்னைய தலைவர் திரு. க. துரைரத்தினம், செயலாளர் திரு. க. சிவபாதசோ ஆகியோரால் தொடரப்பட்ட வழக்கினை எமது புதிய செயற்குழு சிறிதும் ஆதரிக்கவில்லை."

மேற்படி தீர்மானம் மனுதாரர்களுக்கு அனுப்பிவைக்கப்படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ஈ)

## பொலிஸ் பாதுகாப்புடன் நடந்த கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாநகர சபை வெள்ளிவிழாவை யொட்டி நேற்று மாலை திறந்தவெளி அரங்கில் நடந்த கலை நிகழ்ச்சி பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் நடந்தது. ஆயினும் பெருந்திரளான ஆண்கள், பெண்கள் குழந்தைகள் நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர்.

திறந்தவெளி அரங்குக்குள் நுழைந்த பலரது உடைமைகளை பொலிசார் சோதனையிட்டபின்னரே உள்ளே செல்ல அனுமதித்தனர்.

காட்சிச் சாலைகளையும் பொலிசார் கண்காணித்தனர்.

இலங்கையிலே முதலாவது வர்ண மின்விளக்குகள் ஒளி பரப்பிய படகுபவனி நேற்று இரவு நகர் கடலில் வைத்து நூற்றுக்கணக்கனோர் இந்த அழகுக்காட்சியைப் பார்த்து ரசித்தனர்.

யாழ். மாநகரசபை வெள்ளிவிழாவையொட்டி நடந்த இந்த நிகழ்ச்சிக்கு யாழ் கச்சேரி அதிகாரி இ. யோகநாதன் தலைமை வகித்தார்.

நேற்றுக்காலை அலங்கார ஊர்திகள் பவனி யாழ். நகரில் பத்துமைல் தூரத்துக்கு நடந்தது. 20 ஊர்திகள் கலந்து கொண்டன.

## 'கைக்குண்டு' என கூறியபடி மக்கள் சிதறி ஓடினர்!

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மாநகரசபை வெள்ளிவிழாவையொட்டி, சனிக்கிழமை இரவு யாழ் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற கலைநிகழ்ச்சியின்போது சபையில் சில நிமிடநேரம் சலசலப்பு ஏற்பட்டது.

இரவு 10-00 மணியளவில் நடந்த இச்சம்பவத்தை தொடர்ந்து பெண்கள், சிறுவர்கள், உட்பட, பிற பகுதியிலிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் நாலா பக்கங்களிலும் சிதறி ஓடினார்கள்.

வாலிபர் சிலர் றப்பரினால் செய்யப்பட்ட பாம்புகளை, பெண்கள் மத்தியில் வீசியதாகவும், தொடர்ந்து வேறு சிலர், பந்து உருவத்தில்செய்யப்பட்ட கடதாசிகளுக்கு தீமூட்டி, மேல் நோக்கிவீசியதாகவும், இதனைக்கண்டே மக்கள் பயந்து, ஓடியதாகவும் இச்சம்பவம்பற்றிக் கூறப்படுகிறது.

'கைக்குண்டு கைக்குண்டு எனக் குளறிக்கொண்டு' மக்கள் ஓடியதாகவும் மறுபக்கத்தில் 'பாம்பு' எனக் குளறிக்கொண்டும் ஓடியதாகவும் கூறப்படுகிறது.

திறந்த வெளி அரங்குப்பக்கத்தில் உள்ள வீதிகள் ஓரம் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள், சைக்கிள்கள் யாவும் சில நிமிடநேரத்தில் விரைந்து சென்றுவிட்டன.

அமைதியை நிலைநாட்டும் பொருட்டு, பொலிசாரும், விழாக்குழுவினரும் தலையிட்டனர். அமைதியாக இருந்து கலைநிகழ்ச்சிகளைபார்க்குமாறு ஒலிபெருக்கிமூலம் வேண்டுகோள் விடப்பட்டது.

(க-ஈ)

## 'உயிரைப் பணயம் வைத்தும் குறைந்த ஊதியமே கிடைக்கிறது'

### மீனவர் பிரச்னை பற்றி அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், திங்கள்

'விவசாயிகளைவிட மீனவர்களே முதலாளிகள், தரகர்கள், சுரண்டல்காரர்கள் ஆகியோரின் இறுக்கமான பிடிக்குள் கடுமையாகச் சிக்குண்டு பாதிக்கப்படுகிறார்கள்.

நேற்று முன்தினம் நடைபெற்ற வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் கருத்தரங்கில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வி. அமரசேகரா கூறினார்.

திரு. அமரசேகரா தொடர்ந்து கூறியதாவது:

'விவசாயியைப் பொறுத்தவரை அவனுக்குப் பலவாய்ப்புக்களும் வசதிகளும் உண்டு. ஆற்றலுள்ள குடும்ப அங்கத்தவர்கள் அத்தனைபேரும் விவசாயின் வேலைகளில் கைகொடுத்து உதவி செய்கின்றனர். மீனவனுக்கு அவனுடைய குடும்பத்தில் எத்தகைய உதவிகளும் கிடைப்பது அரிதாயுள்ளது.

'தன் உயிரையே பணயம் வைத்துக் கடலில் சென்று மீனைப் பிடித்தும் அவனது பொருட்களுக்கு மிகக் குறைந்த ஊதியமே கிடைக்கிறது.

விவசாய உற்பத்திப் பொருட்களைப் பல வாரங்களுக்குப் பாதுகாப்பாகப் பேணிப் பாதுகாக்க முடியும். கடற்றொழிலைப் பொறுத்தவரை இத்தகைய வசதிகள் வாய்ப்புக்கள் இல்லை. இவ்வித காரணங்களினால் சுரண்டலுக்கும் நெருக்கடிக்குள்ளும் சிக்கித் தவிக்கும் [illegible]

மீனவன் வரும் துன்பங்களையும் இடையூறுகளையும் நீக்கி அவனது வாழ்வைச் சுபீட்சம் நிறைந்ததாக வளம்படுத்தும் நோக்குகளையும் இலக்குகளையும் ஒரு வருடத்திற்கு முன்பு மறுசீரமைக்கப்பட்ட அரசின் கடற்றொழில் திட்டங்கள் கொண்டுள்ளன'

'முதலாளிகளின் பிடியிலிருந்து விடுபடவும், சுரண்டலில் இருந்து தப்பி தொழிலை அபிவிருத்தி செய்து நிவாரணம் காணுவதற்கு கடற்றொழிலாளரின் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் அணுகலாம்.

'நோர்வேயில் கடற்றொழிலாளியும் தனிப்பட்ட வியாபாரி ஒருவரும் நேரடியாகப் பணத் தொடர்புகளை வைத்துக் கொள்ளக் கூடாது எனச் சட்டரீதியாகத் தடுக்கப்பட்டுள்ளது. வியாபாரிகள் மீனவர்களிடம் மீனைச் சேகரித்து கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கம் மூலமே மீன் விநியோகம் நடைபெறுகிறது. மீனவர்களுக்கும், வியாபாரிக்கும் பணத்தைக் கொடுக்கும்

[4-ம் பக்கம் பார்க்க]

## மரண அறிவித்தல்

### K. L. அந்தோனிப்பிள்ளை
பண்டத்தரிப்பு

பண்டத்தரிப்பு K. L. அந்தோனிப்பிள்ளை அன்சன்ஸ் ஸ்தாபகரும் திருமதி பிரான்சிஸ்கா தங்கமுத்துவின் அன்புக் கணவரும், L. A. மனுவேற்பிள்ளை, L. A. வேதநாயகன் ஆசிரியர், L. A. மரியநேசன் என்போரின் அருமைத் தந்தையுமான K. L. அந்தோனிப்பிள்ளை காலமாகிவிட்டார். ஈமச்சடங்குகள் திங்கட்கிழமை மாலை நான்கு மணிக்கு நடைபெறும். 185

## மரண அறிவித்தல்

### சி. எஸ். கைலாசம்பிள்ளை

யாழ்ப்பாணம் C. S. கைலாசம்பிள்ளை அன்சன்ஸ் உரிமையாளரும், திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம் வாசியுமான திரு. C. S. கைலாசம்பிள்ளை அவர்கள் 14-7-74-ல் காலமாகிவிட்டார். இவர் மீனாட்சிப்பிள்ளையின் அன்புக்கணவரும், சரோஜினிதேவி, இராமநாதன், திரிபுவனேஸ்வரன், இராசரத்தினம், இந்திராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், கைத்தொழில் விஞ்ஞான, ஆராய்ச்சி அமைச்சைச் சேர்ந்த கந்தசாமியின் அன்புமாமனாரும், அன்னப்பிள்ளை, சுந்தரையா, கிருஷ்ணபிள்ளை, கணபதிப்பிள்ளை [சி. எஸ். கணபதிப்பிள்ளை அன்சன்ஸ்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஸ்வநாதபிள்ளையின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் 15-7-74-ந் திகதி திங்கட்கிழமை காலை 11-மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம். 186

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### விற்பனைக்கு

சுன்னாகம் சந்தைக்கு அருகாமையில் முத்துக்கிருஷ்ணன் ஒழுங்கையில் 5 பரப்பு நாலேவம்மவட்டி என்னும் காணி இரண்டு துண்டுகளாகவும் விற்பனைக்குண்டு பிரஜ்ஞல் என்ரப் பிறைசஸ் 213/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 302

### கல்வி

நீங்கள் எங்கு வசித்தாலும் அனுபவமும், ஆற்றலுமுடைய ஆசிரியர்களிடம் தபால்மூலம் கல்வி பயிலுங்கள். விபரங்களுக்கு எழுதுக. றெக்ஸ் ரியூட்டறி, யாழ்ப்பாணம். 285

### விற்பனைக்கு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு முன்பாக இருக்கும் 'உமாபவனம்' என்னும் வீடும் வளவும் விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். பொ. முத்துக்குமாரசாமிக் குருக்கள். 38, இராமநாதன் வீதி, கொழும்பு-13. 357

## இன்றைய பலன்

**ஆனிமாதம் 31-ந் திகதி (15-7-74)**

**மேஷம்:** இந்த இன்ன அலைகளின் மத்தியில் சிரமப் படுவீர்கள். எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும் பொருளும் செலவாகும்.

**ரிஷபம்:** கடந்துபோன சம்பவம் ஒன்றை குறித்துக் கவலைகள் அதிகமாகும் பல வழிகளிலும் பணம் செலவாவதற்கு இடமுண்டு.

**மிதுனம்:** தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும். கண்துடைப்பு வேலை நடக்கும். கவனம் செலுத்தவும். பொறுமையைப் பேணி நடக்கவும்.

**கடகம்:** கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள். கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும்.

**சிம்மம்:** வருமானத்தில் திருப்திகரமான நிலை தென்படும். புதிய முயற்சிகளிலும் ஈடுபடுவதற்கு விரும்புவீர்கள்.

**கன்னி:** மனதில் அமைதி குன்றும் அதிகாரிகள் எக்காலமிருவர் மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும். அமைதியே நன்று.

**துலாம்:** தனத்துடன் வாழ்வு இன்று தவறுதலிடைக்கும். சிலருக்கு வியப்பூட்டும் செய்தியும் கிடைக்கும் அதிர்ஷ்ட லாபங்களுக்கும் இடமுண்டு.

**விருச்சிகம்:** கடமையில் தடை ஏற்படும் காலதாமதத்தால் பொருட்செலவு உண்டாகும். பிறர் நம்பிக்கையைத் தவிர்க்கவும்.

**தனுசு:** கனிவான நினைவுகளின் மத்தியில் இன்று வாழ்க்கையை நடத்துவீர்கள். பெரியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும்.

**மகரம்:** கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள். ஒவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும்.

**கும்பம்:** பொதுப்பணிகளில் ஈடுபடவிரும்புவீர்கள். குறிப்பாக அரசியல் வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கலாம்.

**மீனம்:** வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும் சுற்றாடலில் உற்சாகமான வரவேற்பு கிடைக்கும்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# வாட்டர்கேட் ஊழலுக்கு நிர்வாகச்சீர்கேடு காரணம்

## செனட்கமிட்டி அறிக்கை

வாஷிங்டன், ஜூலை 14

வாட்டர்கேட் ஊழல் இடம்பெற்றமைக்கு நிர்வாக சீர்கேடுகள் காரணம் என்று இது பற்றி விசாரணை செய்த செனட்சபையின் விசாரணைக் குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட இக்கமிட்டி 17 மாத காலம் விசாரணைகளை நடத்தி சுமார் 200 பேரின் சாட்சியங்களைக் கேட்டறிந்தது.

கமிட்டி விடுத்துள்ள அறிக்கையில் மீண்டும் இக்காதிரியான ஊழல் இடம்பெறாதபடி தேர்தல்களை மேற்பார்வை செய்வதற்கென கட்சிசார்பற்ற பொது கமிஷன் ஒன்று நியமிக்கப்படவேண்டும் என்றும் ஊழல்பற்றிய புகார்களை விசாரிக்க சட்ட அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவேண்டுமென்றும் தெரிவித்துள்ளது. வெள்ளை மாளிகை உளவு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாக். குற்றச்சாட்டுக்கு ஆப்கான் மறுப்பு

காபூல், ஜூலை. 14

பாகிஸ்தான் எல்லையில் ஆப்கானிஸ்தான் படைகளை குவித்து வருவதாக பாகிஸ்தான் செய்துள்ள குற்றச்சாட்டுக்களை ஆப்கானிஸ்தான் மறுத்துள்ளது.

பலுகிஸ்தானிலும், எல்லை மாகாணங்களிலும் பாகிஸ்தான் செய்துவரும் கொடுமைகளை மூடிமறைக்கவும் மக்களதும், உலக நாடுகளதும் கவனத்தைத் திருப்புவதற்காகவுமே பாகிஸ்தான் பிரதம மந்திரி ஆப்கானிஸ்தானுக்கு எதிராகப் பொய்ப் பிரசாரங்களைச் செய்கிறார் என்று ஆப்கானிஸ்தான் அதிகாரிஒருவர் கூறினார்.

இந்தியாவின்

# 10-வது பெரிய துறைமுகமாக தூத்துக்குடி பிரகடனம்!

சென்னை, ஜூலை 14

தூத்துக்குடி துறைமுகம் இந்திய பெரும் துறைமுகங்களில் ஒன்றாக இன்று பிரகடனம்செய்யப்பட்டுள்ளது. இதற்கு "புதிய தூத்துக்குடி துறைமுகம்" என பெயரிடப்பட்டுள்ளது.

இதுவரை நடுத்தர துறைமுகமாக இருந்த இத்துறைமுகம் இந்தியாவின் 10-வதும் தமிழ்நாட்டில் சென்னைக்கு அடுத்ததுமான பெரிய துறைமுகமாகும்.

22 கோடி ரூபா செலவில் இத்துறைமுக விரிவுபடுத்தும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன. இவ்வேலைகள் அடுத்தாண்டளவில் பூர்த்தியாகிவிடும் என்று அறிவிக்கப்படுகிறது.

## இந்திய உப ஜனாதிபதி தேர்தல்

புதுடில்லி, ஜூலை 14

இந்திய உபஜனாதிபதி தேர்தல் ஆகஸ்ட்மாதம் 27ந்திகதி பார்லிமெண்ட் ஹவுஸில் நடைபெறவிருக்கிறது.

இப்பதவிக்கான வேட்பு மனுக்கள் ஆகஸ்ட் 9ந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று பிரதம தேர்தல்கமிஷனர் திரு.சுவாமிநாதர் தெரிவித்தார்.

## கும்பாபிஷேகம்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் திருவடிநிலை வாசை வயிரவர் கோவில் கும்பாபிஷேகம் இம்மாதம் 18ந் திகதி வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது. இரவு நடிகமணி வி. வி. வயிரமுத்து கோஷ்டியினரின் 'சத்தியவான் சாவித்திரி' நாடகமும் நடைபெறவுள்ளது. வெள்ளிக்கிழமை காலை திருவடி நிலையில் ஆடி அமாவாசைத் தீர்த்தம் நடைபெறும்.

## சமய அறிவுப் போட்டி

சுழிபுரம், ஞாயிறு

வழக்கம்பரை சனசமூக நிலையப் பஜனைச் சபையினரால் சமய அறிவுப் பொதுப் போட்டி நடாத்தப்படவுள்ளது. போட்டிக்கான கேள்வித் தாள்கள் அச்சாகி விநியோகிக்கப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை நகரசபை வரியிறுப்பாளருக்கு

**பிரதான அறிவித்தல்**

1974 ஆம் வருடம் 2-ம் காலாண்டிற்கான ஆதன வரி 31-7-1974 அம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு முன் இவ்வலுவலகத்தில் செலுத்தப்படல் வேண்டும். அதன் பின் கட்டாமல் இருக்கும் வரியின்மீது 10 வீதம் பற்றுனைச் செலவாக அறவிடப்படும்.

இதுவரையுள்ள நிலுவைகளை உடனடியாகக் கட்டி உங்கள் ஆதனங்களை நடுக்கட்டல், விற்பனை செய்தல் ஆகிய விருப்பமற்ற நடவடிக்கைகளிலிருந்து தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

ஐ. நவரத்தினம்,
தலைவர்,
நகரசபை,
வல்வெட்டித்துறை.

நகரசபை அலுவலகம்,
வல்வெட்டித்துறை,
10-7-1974. 189

# சிவாகமங்களை தேவநாகரி எழுத்தில் தமிழ் மொழியில் வெளியிடத் தீர்மா[னம்]

கொழும்பு, ஞாயிறு

கொழும்பு விவேகானந்த சபையில எழுபத்தோராவது ஆண்டுப் பொதுக்கூட்டம் அண்மையில் சபையின் தலைவர் முன்னாள் மாவட்டநீதிபதி திரு. வே. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. அதில் விவேகானந்த சபையின் உபதலைவர்களில் ஒருவராகிய திரு. அருள் தியாகராஜா காமிகம், காரணம் முதலிய சிவாகமங்களைத் தமிழ் மொழிபெயர்ப்புடன் வெளியிடவேண்டுமென்று கொண்டுவந்த பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மேலும் இச்சிவப் பணியை இனிது நிறைவேற்ற திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் திருக்கயிலாய பரம்பரை தருமபுர ஆதீனம் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஆகியவற்றின் முதல்வர்களின் உதவியைக் கோருமாறு அவர் கேட்டுக் கொண்டார்.

கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேசர் ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியராகிய பிரம்மஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் இதனைப் பெரிதும் ஆதரித்துப் பேசினார். இச்சிவாகமங்களை அச்சுவாகனமேற்றி செல்லரித்து இறந்துபட்டழியவிடாது காத்தல் சைவமடங்களினதும், சைவப் பெருமக்களினதும் பெருங்கடமையென்றும், இச்சிவாகமங்களை தேவநாகரி எழுத்தில் தமிழ் மொழிபெயர்ப்புடன் வெளியிட்டால் அவைகளை தென்னாட்டவர்களுக்கு மாத்திரமன்றி வடநாட்டவருக்கும் மேலைத்தேசத்தவர்க்கும் பயன்படுமென்றும் அவர் கூறினார் இம்மூன்று சைவத் திருமடங்களும், சிவநெறியையும் செந்தமிழையும் பரப்பச் செய்து வரும் ஆக்கவேலைகளைப் பற்றியும் திரு. அருள். தியாகராஜா எடுத்துக் கூறினார். ஆண்டு விழாவில் நிறைவேற்றப்பட்ட திரு. அருள் தியாகராஜாவின் பிரேரணைகளாவன: "வேதமோடாகமம் மெய்மமிறைவன்" என்று பத்தாந் திருமுறையாகிய திருமந்திரங் கூறுகின்றது. சைவாகமங்கள் இருபத்தெட்டு, இவ்வாகமங்களுள் பல இன்னும் அச்சேறாமல் இருக்கின்றன காமிகாகமம், காரணாகமம், வாதுளாகம், சுப்பிரபேதாகமம், புட்கராகமம் ஆகிய ஐந்தும் கிரந்த எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளன. இவைகளில் சிலவற்றிற்கு தமிழ் மொழிபெயர்ப்புகளும் உள. இவற்றில் தமிழில் மொழிபெயர்க்கப்படாத ஆகமங்களை தமிழில் மொழிபெயர்த்து அச்சிட்டும், மொழிபெயர்க்கப்பட்ட ஆகமங்களை மீண்டும் சிறந்தமுறையில் பதிப்பித்தும் சைவ உலகிற்கு உதவுமாறு திருக்கைலாசப் பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம், திருக்கைலாச பரம்பரை தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் ஆகியவற்றின் முதல்வர்களை இச்சபை மிக்க விநயத்துடன் வேண்டுகின்றது. மேலும் இத்திருப்பணியை நிறைவேற்ற உதவுமாறு தென்னாட்டிலும் ஈழநாட்டிலும் உள்ள சைவ சீலர்களை இச்சபை கேட்டுக் கொள்கின்றது."

"ஈழநாட்டின் ஞானக் கொழுந்தாய் விளங்கிய யாழ்ப்பாணம் யோகசுவாமிகளை நினைவுகூரும் முகமாக ஒரு தபால் முத்திரையை வெளியிடுமாறு இலங்கை அரசாங்கத்தையும் தபால் தந்தித் தொடர்பு அமைச்சரையும் இச்சபை மிக்க விநயத்துடன் கேட்டுக்கொள்கின்றது."

'இந்நாட்டிலுள்ள கிழக்கு மாகாணத்தில் ஆறுமுகநாவலரென்று இந்நாட்டு மக்களாற் போற்றப்படுபவரும், தமது கல்விப்பணி, சைவப் பணிகளினால் ஈழநாட்டுக்குப் பெரும்புகழையீட்டித் தந்தவரும், ஈழத்துச் சைவமக்கள் அதிலும் சிறப்பாகக் கிழக்கு மாகாணத்துச் சைவமக்கள், பிற சமய போதனைகளாற் கவர்ந்து தமது சமயத்தைக் கைவிடாது காத்த பெருந்தகையாகிய சுவாமி விபுலானந்தர் அவர்களை நினைவு கூரும்முகமாக ஒரு தபால் முத்திரையை வெளியிடுமாறு இலங்கை அரசாங்கத்தையும், தபால் தந்தித் தொடர்பு அமைச்சரையும், இச்சபை மிக்க விநயத்துடன் கேட்டுக் கொள்கின்றது'

"சுவாமி விபுலானந்தர், ஆறுமுகநாவலர் பெருமானிடத்தில் மிக்கபேரன்புபூண்டவர். நாவலர்பெருமான் மீது பல பாடல்களைப் பக்திச் சுவைததும்பப் பாடியிருக்கின்றார். நாவலர்பெருமான் தினத்தை ஒவ்வோராண்டும் கொண்டாடும் இச்[சபை] சுவாமி விபுலானந்[தர் தினத்]தையும் ஒவ்வோ[ராண்டும்] கொண்டாட வேண்[டுமென] இவ்வருடாந்தக் [கூட்டம்] கேட்டுக்கொள்கி[றது]

இந்த நாட்டில் ஐந்[து] ரென்று அழை[க்கப்படும்] நாவலர் பெரும[ான்] சர்வதேசப்புகழ்பெ[ற்ற] யோகி ஆனந்த [குமார]சாமிக்கும் தபால் தொடர்பு அமை[ச்சு] முயற்சியால் இலங்[கை அர]சாங்கம் நினைவு [முத்திரை]களை வெளியிட்ட[து] அதேபோல் இந்திய [அரசாங்]கம் இவ்வுலகிற்கு [...] யைப் போதித்த [...] வருக்கும். [...] சென்று இ[...] பெருமைக்கு[ரிய] சுவாமி விவேகான[ந்தருக்]கும் இன்னும் சில [...]க்கும் நினைவு முத்[திரைகளை] வெளியிட்டிருக்கிறது இரண்டாம், மூன்[றா]வதாம் பிரேரணை[களைக்] கொண்டுவந்த திரு. தியாகராஜா த[...] யில் குறிப்பிட்டார். [...] விவேகானந்த [...] பரீட்சைக் காரியத[ரிசி] சி. கந்தசாமி, சு[...]களுக்கும், கொழும்[பு விவேக]ானந்த சபைக்கும் [...] மாயிருந்து வந்த [...] தொடர்பை எடுத்[துக் கூறி]யதுடன். விவேகான[ந்த] சுவாமிகளவர்களின் [ஜனன] தினத்தை ஒவ்வோ[ராண்டும்] கொண்டாடவேண்[டு]வதையும் வலியுறு[த்தினா]ர்.

—

ஊரதீவு,

புங்குடுதீவில் குடி[நீர்த்] தட்டுப்பாடு நிலவு[ம் பகுதி]களான ஊரதீவு, [...] வெளி, கல்வள[...] இராசம்பிகளுக்கு [...] சாட்டியிலிருந்து வெ[...] குடிதண்ணீர் வழ[ங்கப்பட்டு] வருகின்றது.

லாலாசோப் ஸ்தாபனத்தாரின்
4-வது மின்னொளியில்
கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி
பங்கு பற்றுபவர்கள் 20-7-74-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
செற்-அப் முறையிலும் ஒவர்கேம் முறையிலும் விளையாட்டுகள் நடைபெறும்.
**லாலா சோப் தொழிற்சாலை**
அச்சுவேலி.

**விவசாய இரசாயனப் பொருட்கள்**
விவசாயிகளே!
உங்கள் பயிர்களை நாசஞ் செய்யும் களை, பூச்சி, இருமி ஆகியவைகளிலிருந்து பாதுகாத்து, அதிக விளைச்சலைப் பெறுவதற்குத் தேவையான சிறந்த மருந்து வகைகளையும், உரவகைகளையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.
**ஜெனரல் ஏஜன்ஸீஸ் லிமிடெட்.,**
3, ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம்.

**அபிஷேகத் திரவியங்க[ள்]**
சந்தனக்குழம்பு
(மைசூர், அவுஸ்திரேலியா, சந்தனக்கட்டைக[ளால்] தயாரிக்கப்பட்டவை)
0 பழனி வாசனை விபூதி
0 அபிஷேக சாமான்கள்
0 பஞ்சாமிர்த சாமான்கள்
0 நைவேத்திய சாமான்க[ள்]
0 அஷ்டபந்தன மருந்து
0 அத்திபாரமிடும் பொருட்க[ள்]
0 விவாக முகூர்த்த பொருட்க[ள்]
வாசனை மிகுந்த தெய்வீக மணம் கமழும்
0 "ராதா" பத்மினி ஜவ்வாது பத்தி
0 99 — 999 ஜவ்வாது பத்தி
0 இந்திராணி பத்தி
0 சக்தி, பூஜா அகர் பத்திகள்
0 மட்டிப்பால் பத்திகள்
விளைவு சூடம், சாம்பிராணி
கோவில் தேவைகளுக்கான
சகலவிதமான சாமான்களும் நிதான[மான] விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ள[லாம்]
மற்றும் மருந்துகள், மருந்துச்சரக்குக[ள்]
ஆயுள்வேத கூட்டுத்தாபனத்தாரி[ன்] தயாரிப்புகள் மலிவாகக் கிடைக்கு[ம்]
**எஸ். சுப்பிரமணிய[ம்]**
அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்குகள் கோவில் அபிஷேகத்திரவிய வியாபாரம்)
53, கே.கே.எஸ்,றோட், யாழ்ப்பாணம். போன்: 541, வீடு 7068
160, செட்டியார் [தெரு], கொழும்பு-11 போன்: [...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...முழுத்தில்
...தீர்மானம்

...ண்டாடும் இச்சபையை... மி விபுலானந்த நினை... பும் ஒவ்வோராண்டும் ...ண்டாட வேண்டுமென்ற ...ருடாந்தக் கூட்டம் ...டுக்கொள்கின்றது" ...நாட்டில் இந்தாண்டுரவ ...று அழைக்கப்படும் ...லர் பெருமானுக்கும், ...தேசப்புகழ்பெற்ற கலா ...கி ஆனந்த குமார ...க்கும் தபால் தந்தித் ...டர்பு அமைச்சின் ...ந்தியால் இலங்கை அர ...கம் நினைவு முத்திரை ... வெளியிட்டிருக்கிறது. ...பேசல் இந்திய அரசால் ...இவ்வுலகிற்கு நன்னெறி ... போதிக்க திருவள்ளு ...கும், மேல்நாட்டிற்குச் ...று இந்து சமயப் ...ன்மைகளை விளக்கிய ...மி விவேகானந்தருக்கும் ...றும் சில சுவாமிகளுக் ... நினைவு முத்திரைகளை ...ிபிட்டிருக்கிறது என்று ...டகம், மூன்றும் நாண ...பி ரே ர ணை க ளைக் ...ண்டுவந்த திரு. அருள். ...கரர்ஜா தமது உரை ...குறிப்பிட்டார்.

...வேகானந்த சபையின் ...ைசக் காரியதரிசி திரு. ...த்தசாமி, சுவாமியவர் ...ும், கொழும்பு இவிவே ...ந்த சபைக்கும் பலகால ...ருந்து வந்த நெருங்கிய ...ர்பை எடுத்துக் கூறிய ...ன். விவேகானந்தசபை, ...மியவர்களின் நினைவு ...த்தை ஒவ்வோராண்டும் ...ண்டாடவேண்டும் என் ...யும் வலியுறுத்திக்கூறி (ஈ)

—

ஊர நீவு, ஞாயிறு ...குடுநீவில் குடிதண்ணீர் ...ப்பாடு நிலவும் கிராமங் ...ன ஊரதீவு, மடத்து ...வல்லன் போன்ற ...ங்களுக்கு வேலணை- ...டியிலிருந்து லொறிமூலம் ...ண்ணீர் வழங்கப்பட்டு ...ன்றது. (ஈ)


...வியங்கள்
...ம்பு
...தனக்கட்டைகளால் ...வை)
...ன விபூதி
...ான்கள்
...ான்கள்
...சாமான்கள்
...ருந்து
...பொருட்கள்
... பொருட்கள்
...ணம் கமழும்
...து பத்தி
...கி
...கள்
...ம்பிராணி
...ருக்கான
...ம் நிதானமான
...க் கொள்ளலாம்
...ந்துச்சரக்குகள்
...பனத்தாரின்
...க் கிடைக்கும்
...ணியம்
...பனி
...ன் கோவில்
...பாரம்)
...செட்டியார் தெரு,
...கொழும்பு-11.
...போன்: 85855


# கொடுமைக்குள்ளாகும் அப்பாவிக் குழந்தைகள்!

## இலங்கையின் முதலாவது பெண்நீதவான் கவலை

கொழும்பு, ஞாயிறு

'சிறுவர் பராமரிப்பு அதிகாரியின் அறிக்கைப்பார்க்கையில் இந்தச் சிறுவன் அமைதியானவன் என்றும் கீழ்ப்படிவானவன் என்றும் தெரிகின்றது. 'நீர் ஒரு பொலிஸ் அதிகாரியாகவிருந்தும் இந்தப் பிள்ளையின் உடம்பில் காணப்பட்ட காயங்களுடன் அவனை எடுத்துச்செல்வது அபாயமாகும் என்று நீ நினைக்கவில்லையா?'

மம்பலப்பிட்டியவில் கடந்த வெள்ளியன்று இலங்கையின் முதலாவது பெண்நீதவான் திருமதி சுதர்மா தர்மதாஸ முன்னிலையில் சிறுவர் வழக்கு விசாரணையொன்று ஆரம்பமானபோது கோர்ட்டில் ஆஜராகியிருந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரைப்பார்த்து நீதவான் இவ்வாறு கேட்டார்.

ராஜேந்திரா என்ற ஆறு வயதுச் சிறுவனின் எஜமானரான டொரிங்டன்சதுக்கத்திலுள்ள விரல் அடையாள ஆய்வுப்பிரிவு பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. ஏ. ராசநாயகம் சிறுவர் நீதிமன்றத்தின் விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

மன்னிப்பிட்டிய சிறுவர் முகாமில் அனுமதிக்கப்பட்டுள்ள சிறுவன் ராஜேந்திரா அன்று கோட்டுக்கு வந்திருக்கவில்லை. காய்ச்சலினாலும், போஷாக்கின்மையினாலும் எரிகாயங்களினாலும் அவதிப்படும் அச்சிறுவன் ஹோமகம ஆஸ்பத்திரியில் இப்போது சிகிச்சை பெற்றுவருகின்றான்.

'அவசியமின்றி இந்தக் குழந்தை கொடுமைப்படுத்தப்பட்டுள்ளது என்று அறிந்து நான் மிகவும் கவலையடைகிறேன். இக்குழந்தையின் எஜமானர் என்ற முறையில் நீர் என்ன சொல்கிறீர்?',

இவ்வாறு பொலிஸ் அதிகாரியான ராஜநாயகத்திடம் பெண்நீதவான் கேட்டார்.

'அது ஒரு நீண்ட கதை' என்று ஆரம்பித்த திரு. நாயகம், "ஓர் ஆண்டுக்கு முன்னர் எனது 10 வயது பெண் குழந்தை இறந்துவிட்டது. அலுவலகவிஷயமாக இவ்வருடம் மேமாதம் ஒப்புத்தனைக்கு நான் போயிருந்தபோது கந்தசாமி என்ற ஒரு நபர் இந்தச்சிறுவனை என்னிடம் கொண்டுவந்து கொடுத்தான். சிறுவனின் பெற்றோரும், சகோதரிகளும், சகோதரர்களும் தோட்டத்தில் வேலை செய்யும் ஏழைகள் என்றும் அவர் சொன்னார். பையன் மிகவும் ஏழைப்படிகாரன், அவன் உடம்பிலுள்ள காயங்கள் அப்போதே அவனது பெற்றோரால் ஏற்படுத்தப்பட்டவைதான்' என்று இன்ஸ்பெக்டர் சொன்னார்.

'நீர் ஒரு பொலிஸ் அதிகாரி. அந்தப்பிள்ளையை எடுத்துச் சென்றவுடன் பொலிசில் ஒரு குறிப்பாவது பதிந்து செல்வதற்கு நீர் நினைக்கவில்லையா?' என்று நீதவான் கேட்டார்.

'அந்தக் குழந்தைமீது எனக்குப் பெரிதும் அனுதாபமாகவிருந்தது. நானே என் கையால் அவனைக் குளிக்க வார்த்திருக்கிறேன்' திரு ராசநாயகம்.

"சரி, நான் அறிந்தவரை குறைந்தது மூன்று மாதங்களாக அக்குழந்தை குளிக்கவில்லையென்று தெரிகின்றது. உடம்பிலுள்ள காயங்கள் மிகப் புதியவை. அவை சீழ் கட்டக்கூடிய நிலையிலிருந்திருக்கின்றன. மேலும் குழந்தை மிகவும் போஷாக்கற்ற நிலையிலிருக்கின்றது. குறிப்புகளிலிருந்து பார்க்கையில் அக்குழந்தை மிகப் பெரிய சட்டையொன்றைப் போட்டுக் கொண்டிருந்துள்ளது. ஒருவேளை அது உம்முடையதாய் இருக்கலாம். அது போலவே கிழிந்துபோன பெரிய கால் சட்டை போட்டுக் கொண்டிருந்துள்ளது. முன்னர் இருமுறை உமது வீட்டிலிருந்து இக் குழந்தை தப்பியோட முயற்சி செய்திருக்கின்றது."

இவை ஒன்றுக்கும் திரு. ராசநாயகம் ஒன்றும் கூறவில்லை.

"அடுத்த தவணையின்போது உமது மனைவியையும் இங்கு அழைத்து வரவேண்டும், அக் குழந்தை தனது வாக்குமூலத்தில் உமது மனைவியை விசேஷமாகக் குறிப்பிட்டுள்ளது" என்றார் நீதவான்.

"என் மனைவி அந்தச் சிறுவனைப் பார்த்ததுகூடக் கிடையாது" என்றார் திரு. ராசநாயகம். "சிறுவன் என் வீட்டுக்கு வந்தகாலத்திலிருந்து மனைவி யாழ்ப்பாணத்திலிருந்துவருகிறார்" என்றார்.

"அடுத்த தவணையின்போது உமது மனைவி இங்கு சமுகமளித்திருக்க வேண்டும், கந்தசாமி என்ற அந்த நபரையும் கூடவே அழைத்து வரவும்" என்று நீதவான் உத்தரவிட்டார்.

'ஒன்றுமறியாத பல குழந்தைகள் இவ்வாறு கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர்' என்று குறிப்பிட்ட திருமதி தர்மதாஸ அடுத்த விசாரணையை ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## புகார்

சுழிபுரம், ஞாயிறு

வலிகாமம் மேற்கு ஐக்கிய பாற்பண்ணைச் சங்கத்துக்குப் பால் கொடுத்த நூற்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர் வருடம் ஐந்துக்கு மேலாகியும் பணம் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாகவும், சம்பந்தப்பட்டவர்கள் தமது நிலமையை மேலதிகாரிகளுக்குப் புகார் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது. (அ)

# 'யாழ் மாவட்டம் முழுதுக்கும் பெருமையளிக்கும் விழா'

யாழ்ப்பாணம், திங்கள்

"வெள்ளிவிழா யாழ். மாநகரசபை எல்லைக்குள் பட்ட மக்களுக்கு மட்டும் சொந்தமான விழாவல்ல, யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் எல்லாருக்கும் சொந்தமென்பதை. இந்த சவாரி போட்டிக்கு பிற இடங்களிலிருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான மக்கள் உறுதிப்படுத்திவிட்டனர்".

யாழ் மாநகரசபை வெள்ளி விழாவையொட்டி மாட்டு வண்டி சவாரிப்போட்டி பரிசளிப்புவிழாவில் பேசிய யாழ். மேயர் திரு. அல்பிரட் துரையப்பா மேற்கண்டவாறு கூறினார்.

சவாரிப்போட்டியில்வெற்றி பெற்றவர்களுக்கு யாழ். மேல்நீதிமன்ற நீதவான் திரு. ரி. ஜே. ராஜரத்தினம் பரிசில்களை வழங்கினார்.

யாழ். கோட்டை முற்றவெளி மைதானத்தில் நேற்று மாலை நடந்தசவாரிப் போட்டி விழாவில் பெண்கள் உட்பட

(4-ம் பக்கம் பார்க்க)


ஸ்ரீதர் சினிமா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன் சாவித்திரி நடித்த
பிரேம பாசம்
வெகு விரைவில் MAGNUMFORCE (Cinemascope)

றியோ (யாழ். நகர மண்டபம்)
தினசரி 10-30, 2-00 4-45, 7-15, 9-45
ஆபிரிக்காவின் இரகசியக் காடுகள்
SECRET FOREST OF AFRICA
(கலர்)

ராணி [யாழ்ப்பாணம்]
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா முத்துராமன் - நம்பியார்
தினசரி 4 காட்சிகள்
ஒரு தாய் மக்கள்

மனோஹரா (யாழ்ப்பாணம்)
மகத்தான 3-வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் கே.ஆர்.விஜயா சுந்தரராஜன் மனோகர்
வாயாடி

2-வது ஜனத்திரள் மாதம்
ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி நம்பியார் - முத்துராமன் நடித்த
பொன்னூஞ்சல்

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30, சனி, ஞாயிறு காலை 10-30
இது ஒரு வழக்கமான கதை அல்ல; முற்றிலும் மாறுபட்ட கதை.
தனக்குரிய மனைவியை, தான் அடையவேண்டிய அன்புச் செல்வத்தை தேடிப் புறப்படும் ஒரு கோடீஸ்வரனின் கதை
ஆறு குணங்கள் கொண்டவளாம் ஒரு மாது அது யாரோஅவரோ — அவள்தான்......
ராமன் தேடிய சீதை
எம். ஜி. ஆர். ஜெயலலிதா
நம்பியார் • அசோகன் • நாகேஷ் • மனோரமா
டைரக்ஷன்: ப. நீலகண்டன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

லிடோ [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
ஷர்மிலா தாகூர், ராஜேந்திரகுமார் நடித்த
தலாஷ் (TALASH)
(ஈஸ்ட்மன் வர்ண ஹிந்திச் சித்திரம்)

சாந்தி (சுன்னாகம்)
தினசரி 6-30, இரவு 9-30 ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி — ஜமுனா
தங்கமலை ரகசியம்

நாகம்மாள் [சுன்னாகம்]
தினசரி 4-45, 7, 9-45
ஜெமினி - அஞ்சலிதேவி
மங்கையர் உள்ளம் மங்காத செல்வம்

வெலிங்டன்?



வெல்லி [மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30 சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர்-சரோஜாதேவி
அரசகட்டளை

REGAL Jaffna
Daily 4-45, 7, 9-30 p.m.
Antony Quinn, Inger Steven
in
A DREAM OF KINGS
(color)

உங்கள் உள்ளங்களை மகிழ்விக்க
விஜயம் செய்துள்ளாள்!
யாழ் - வின்ஸர் வெண்திரையில்
அசோக் பிக்சர்ஸ் அளிக்கும்
வந்தாளே மகராசி
தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6 15, 9-45
★ ஜெய்சங்கர் ★ டி. கே. பகவதி
★ வி. எஸ். ராகவன் ★ சோ
★ ஜெயலலிதா (இரு வேடங்களில்) ★ புஷ்பலதா
★ எம். என். ராஜம்
நடித்தது
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்:
இயக்குநர் திலகம் கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
பாடல்கள்: வாலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

ஞானம் ஒற்றுமைக்கு இட்டுச் செல்கிறது. அஞ்ஞானம் பல்வேறுபட்ட நிலைக்கு வழி செய்கிறது.
—ஸ்ரீராமகிருஷ்ணர்.

ஈழநாடு
EELA NADU
15-7-74

# ஒன்று பட்டாலே உண்டு வாழ்வு

யாழ்ப்பாண மாநகர சபையின் இருபத்தைந்தாவது ஆண்டுவிழாவை நடத்துவதில், சபையிலே ஒற்றுமையின்றி ஒரு பகிஷ்கரிக்க நேரிட்டது துரதிருஷ்டமாகும். இதில் யார் சரி, யார் தவறு என்பதைப்பற்றி ஆராய நாம் விரும்பவில்லை. ஆனால் தமிழரின் நிர்வாகத்திலுள்ள ஒரு பெரிய ஸ்தலஸ்தாபனத்தின் வெள்ளி ஜூபிலியை அவர்கள் ஒற்றுமையாக நடத்த முடியாதிருப்பது யாரும் பெருமைப்படுவதற்கில்லை.

இந்த விழா சம்பந்தமாக சில உருவச்சிலைகளை நகரில் அமைக்கும் சமயத்தில் மேயர் அவர்கள் ஒரு புகாரை பகிரங்கமாகச் சொன்னார். உலகத்தமிழ் ஆராய்ச்சிவிழா நடந்த சமயத்தில் முதல் நகரபிதா என்ற முறையில் தம்மை அழைக்கவில்லை என்றார். அவரை அழைத்ததாகவும், அவரே வராமல் இருந்துவிட்டதாகவும் விழாக்காரர்கள் சார்பாகக் கூறப்பட்டது. இது எப்படியிருப்பினும், அவ்விழா விஷயமாகவும் இன்று தமிழ்த்தலைவர்களிடையே விரும்பத்தக்க ஒற்றுமை இருந்திருப்பின், விழா அதிக வெற்றிகரமாக, எவ்வித அசம்பாவிதங்களுமின்றி நடந்திருக்கக்கூடும்.

மேயர் திரு. துரையப்பா எந்தக்கட்சியிலும் சேராமல் இருந்தபோது அவருக்கு அதிகமான செல்வாக்கு இருந்தது. அவர் தமது பதவிக்காலத்தில் நகருக்குப் பல அபிவிருத்திகளையும் செய்திருக்கின்றார். ஒருவருக்கு எந்த அரசியல் கட்சியிலும் சேர உரிமையுண்டு. ஆனால் நகரின் மேயர் பதவி, அரசனுக்குச் சமமானது. அவருக்கு நகர மக்கள் அனைவருடைய அபிமானமும் நம்பிக்கையும் இருக்கவேண்டியது அவசியம். அப்படி இருக்கவேண்டுமாயின் ஒருவர் மேயர் பதவிக்கு வந்ததும், அரசியல் கட்சித் தொடர்புகளை விட்டுவிடவேண்டும். தேசிய அரசுப் பேரவையின் சபாநாயகராக ஒருவர் தெரிவு செய்யப்பட்டதும், அவர் அரசியல் கட்சியிலிருந்து விலகிவிடுகிறார். காரணம் அவர் எல்லாருடைய நம்பிக்கையையும் பெறுவதற்குத்தான். அப்பொழுதே அவர் தமது கடமைகளைச் செவ்வனே செய்ய முடியும். அதுபோன்றதே மேயர் பதவியுமாகும்.

யாழ்ப்பாணம் பல விதங்களிலும் நாட்டுக்கு முன்மாதிரியாக இருப்பதுபோல் யாழ்ப்பாண மாநகரசபையும் இருக்க வேண்டுமென்பதே நகர மக்களின் மேலான விருப்பம். அரசாங்கத்துடன் முட்டிமோதாமல் நல்லுறவு கொண்டால் நகருக்கு அதிகமான உதவிகளைப் பெற முடியுமென்பது உண்மை. மாநகரசபை ஓர் அரசியல் ஸ்தாபனமன்று. அங்கு அரசியல் கட்சி வேற்றுமைகளுக்கு இடம் தருவது நகருக்கு நல்லதன்று. ஒரு மாநகர சபை நிர்வாகத்தையும் நாம் சரிவர ஒற்றுமையாக நடத்தமுடியவில்லையானால், எப்படி பிரதேச சுயாட்சியை வெற்றிகரமாக நடத்தப் போகிறோம்.

இன்று நமக்கு வேண்டியது ஒற்றுமை. தமிழருக்குள் ஒற்றுமை. தமிழர்-சிங்களவர்களுக்குள் ஒற்றுமை, கட்சி அரசியல், தேசிய ஒற்றுமையையும் தமிழரிடை ஒற்றுமையையும் குலைக்கின்றது. இந்த அவலநிலை மாறி, சமூக ஒற்றுமையும் தேசிய ஒற்றுமையும் ஏற்படும் படியான வழிவகை செய்தாலே, ஒன்றுபட்டாலே நமக்கு உண்டு வாழ்வு. ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே.

ஆசைநாயகியுடன்

## சினிமா பார்க்கப் புறப்படுகையில் கத்திக்குத்து

யாழ்ப்பாணம், திங்கள்

ஆசைநாயகியின் தந்தையுடன் சேர்ந்து நன்றாக மது அருந்திச் சாப்பிட்டபின் ஆசைநாயகியுடன் பகல் சினிமாக் காட்சிக்கு புறப்பட்டபோது கத்திக்குத்துக்கு ஆளான ஒருவர் நேற்று யாழ் பெரியாஸ்பத்திரியில் மரணமானார்.

கோப்பாயைச் சேர்ந்த நியூட்டன் நாணயகாரவின் (40 வயது) மரணவிசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது. யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. வி. நடராசா மரணவிசாரணை நடத்தினார்.

இறந்தவரின் ஆசைநாயகியின் தந்தையான விசுவர் ராசரத்தினமே நாணயக்காராவின் நெஞ்சில் கத்தியால் குத்தினார் என்றும் ஆசைநாயகியின் வீட்டிலேயே இச்சம்பவம் நடந்ததென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஆசைநாயகி என்று கூறப்படும் குருநகரைச் சேர்ந்த ரோஸ்மேரி [வயது 30] சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"இறந்த நாணயக்காராவை எனக்கு ஒரு மாதகாலமாகத் தெரியும். சம்பவதினம் அவர் நண்பகல் என் வீட்டிற்கு வந்தார். அவர் சாப்பிட விரும்பினார். சாப்பாட்டுக்கு முன் மது அருந்த விரும்பினார். அவருக்கும் என் தந்தை ராசரத்தினத்திற்கும் மது அருந்த பணம் கொடுத்தேன். இருவரும் சேர்ந்து மது அருந்தினார்கள். என் தந்தை தனக்கு போதாதெனக் கூறி மேலும் ஐந்து ரூபாவிற்கு மது அருந்தினதாகவும் அறிந்தேன்.

இறந்தவர் என் வீட்டில் சாப்பிட்டபின் காலை சினிமாக் காட்சிக்கு வரும்படி அழைத்தார். எனது அறைக்குள் உடையணிந்து புறப்பட்டேன். இறந்தவரும் என் அறைக்குள் நின்றார். அச்சமயம் என் தந்தை வந்து எங்கு போவதாக கேட்டார். நான் பிள்ளைகளுடன் "மெட்னி ஷோவு"க்குப் போவதாக கூறினேன். நீங்கள் தனியே வீட்டில் இருக்கிறீர்கள் என்றும் சொன்னேன். அப்போது என் தந்தை கையில் கத்தி வைத்திருந்தார். திடீரென நாணயக்காராவின் நெஞ்சில் குத்தினார். நாணயக்காரா நெஞ்சைக் கைகளால் பொத்திக்கொண்டார். நான் என் தந்தையைப் பிடித்து கத்தியைப் பறிக்க முயற்சித்தேன். அப்போது என் வலது கையிலும் காயம் ஏற்பட்டது. என் தந்தை ஓடிவிட்டார். நாணயக்காராவை ஒரு டாக்ஸியில் கொண்டு சென்று ஆஸ்பத்திரியில் அனுமதித்தேன். நானும் வேறு ஒரு வார்ட்டில் சிகிச்சைபெற்றேன்."

மரணவிசாரணை அதிகாரி பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை நாளைவரை ஒத்திவைத்தார். (க. ஈ)

## தம்பிரான் சுவாமிகள் கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை நல்லதண்ணீர்க் கிணற்றடி ஞானவைரவர் கோவிலில் இன்று மாலை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் பக்கவாத்திய சகிதம் கதாகாலட்சேபம் செய்வார்.

இவ்வாலய மகாகும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றதைத் தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெற்றுவருகின்றது. மண்டலாபிஷேகம் முடியும்வரை தினமும் சுவாமிகள் கதை செய்வார். [அ]

## யாழ் மாவட்டம்—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். பிற இடங்களிலிருந்தும் ஏராளமான மக்கள் வந்திருந்தனர்.

மேயர் துரையப்பா மேலும் கூறியதாவது.

இது மக்கள்விழா என்பதை இச் சவாரிப்போட்டி எடுத்துக்காட்டிவிட்டது.

இவ் விழாவில், விவசாயிகள், அறிஞர்கள், கலைஞர்கள், மாணவர்கள் எல்லோருக்கும் பங்குபற்ற சந்தர்ப்பம் அளித்துள்ளோம்.

கடந்தவருடம் மாநகரசபை பொருட்காட்சியின்போது, இந்த மைதானத்தை திருத்தி நவீன சவாரி அரங்கு அமைத்து தருவதாக கூறினேன். அதற்கான பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கிறது. விரைவில் அது நிறைவேறும். அடுத்த சவாரிப்போட்டி, நவீன அரங்கில்தான் நடக்கும். (க—ச)

## வண்ணை தேவிமகோற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

வண்ணை சிவன் கோவில் தேவி மகோற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 2ம் திருவிழாவான இன்று பகல் மஞ்சவாகனத்திலும் இரவு பூதவாகனத்திலும் அம்பாள் வலம்வருவார். உற்சவம் முடியும்வரை தினமும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் 'தேவி மகிமை' பற்றி கதாகாலட்சேபம் நிகழ்த்துவார் (அ)

## கோப்பாய் பொலிஸ் நிலையம் தரமுயர்வு

ஆனைக்கோட்டை, ஞாயிறு

இம்மாதம் முதலாம் திகதி முதல் கோப்பாய் பொலிஸ் நிலையம் தரமுயர்த்தப்பட்டுள்ளது. இதில் சுமார் இருபத்திமூன்று பொலிஸ்கான்ஸ்டபிள்களும் இரண்டு பொலிஸ் சார்ஜன்டுகளும் இரண்டு பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும் கடமையாற்று[illegible] (...)

ஆசிரியருக்குக் கடிதம்

'யாழ். வளாகத்தில்

## தமிழ்மொழி மூலமே போதனை வேண்டும்'

11-7-74-ம் திகதி வெளிவந்த 'ஈழநாடு' இதழில் புலோப்பளை கிராமசபைத் தலைவர் ஏ. ஜி. ராஜசூரியர் யாழ்ப்பாணத்தில் அமையவிருக்கும் பல்கலைக்கழக வளாகத்தில் போதனைகள் ஆங்கில மொழிமூலமே நடத்தப்படவேண்டும் என்று கூறியிருப்பது மிகவும் வேதனையான ஒரு கூற்றாகும். இலங்கையின் சகல பல்கலைக்கழக வளாகங்களும் தாய்மொழி மூலமே போதனைகளைச் செய்துவரும் இவ்வேளையில் இத்தகைய ஆங்கிலமோகம் பலரை இன்னும் பற்றிக்கொண்டிருப்பது துரதிருஷ்டமே.

பிறநாடுகளில் ஆங்கில மொழிமூலம் படித்துப் பட்டம்பெற்றவர்களுக்கு தாராளமாக வேலை வாய்ப்புக்கள் இருக்கின்றதென்ற ஒரே காரணத்திற்காக ஆங்கில மொழிமூலம் போதனை நடத்தப்படவேண்டும் என்ற கூற்றை எவருமே ஏற்கமாட்டார்கள். இலங்கையிலுள்ள சிறந்த 'மூளைசாலிகள்' எல்லாம் நாட்டைவிட்டு வெளியேறி, பிறநாடுகளுக்குச் சென்று சேவை செய்வதையிட்டு கவலையுறும் அரசாங்கம், அத்தகைய மூளைசாலிகளின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த பல்வேறு திட்டங்களையும் ஆலோசனைக்கு எடுத்திருக்கும் இச்சமயத்தில், திரு ராஜசூரியரின் விருப்பப்படி ஆங்கிலமொழிமூலம் படித்து வெளிநாட்டுக்கு வேலைதேடி பட்டதாரிகள் சென்றால் எமது நாடு என்னாவது? இது எதிர்காலத்தில் நாட்டை வழிநடத்தும் தமிழ்ப்பட்டதாரிகளை நாட்டைவிட்டும் செல்லத் தூண்டுவதல்லவா? இது எமது நாட்டுக்கு மட்டுமல்ல, தமிழ்பேசும் மக்களுக்கும் கேடு விளைவிப்பதாகும்.

சுயபாஷைகளான தமிழ், சிங்களம் என்பன விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பயன்படாது என்பதும், ஆங்கிலப்பாஷை மூலம்தான் அது சாத்தியமாகும் என்பது ஆணித்தரமாக மறுக்கக் கூடியதொன்றாகும். ஏனெனில் ஆசிய நாடுகளில் அபிவிருத்தியடைந்த நாடான ஜப்பான் இன்று தன் சொந்த மொழி மூலமே அனைத்து ஆராய்ச்சிகளையும் செய்து பெருவெற்றிகளைக் கண்டிருக்கிறது; கண்டும் வருகிறது. போதிய மூலவளமின்றியிருக்கும் ஜப்பான், மேற்கத்திய நாடுகளையே கைத்தொழிற்றுறையில் இன்று விஞ்சிவிட்டது. அமெரிக்காவில் ஜப்பானின் உற்பத்திப் பொருட்கள் பெருமளவில் குவிவதாக அறிக்கையில் தெரிவிக்கின்றன. இத்தகைய மாபெரும் முன்னேற்றங்களைப் பெற்றுள்ள ஜப்பான், தன் சகல துறைகளின் அபிவிருத்திக்கும், ஆராய்ச்சிக்கும் ஆங்கில மொழியையா கையாண்டது? சுதேச ஜப்பானிய மொழியைத்தானே! இன்னும் எத்தனையோ நாடுகள் இன்று தாய்மொழிமூலமே சகல துறைகளிலும் வெற்றிகண்டு வருகின்றன. ஆங்கில மொழியே விஞ்ஞான ஆராய்ச்சிக்குப் பயன்படும் என்ற காலமெல்லாம் இன்று மலையேறிவிட்டது. ஆங்கிலமொழியைவிட தொன்மைவாய்ந்த பல சிறப்புக்களும் பொருந்திய தமிழ்மொழியிலும் எத்தகைய விஞ்ஞான ஆராய்ச்சிகளையும் செய்யமுடியும் என்று திடமாக நம்பலாம்.

எனவே அரசாங்கத்தின் கொள்கைப்பிரகாரமும் தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைப்படியும் யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் சுயபாஷை மூலமே, தமிழ்மொழிமூலமே போதனைகள் நடத்தப்படவேண்டும்; இதுவே அனைவரினதும் பரிபூரண விருப்பமுமாகும்.

எம். எல். எம். இக்பால்
முஸ்லிம்தெரு,
யாழ்ப்பாணம்.

## பாடசாலையில் களவு

ஆனைக்கோட்டை, ஞாயிறு

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் 246 ரூபா பெறுமதியான பொருட்கள் திருட்டுப் போய்விட்டதாக கல்லூரி அதிபர் திரு. நவரத்தினம், கோப்பாய் பொலிஸில் புகார் செய்ததையடுத்து பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பெரேரா இது சம்பந்தமாக விசாரணை செய்தபோது சந்தேகத்தின்பேரில் அக்கல்லூரியைச் சேர்ந்த மாணவன் தவநாயகம் (வயது 14) என்பவரைக் கைது செய்து யாழ். நீதவான் திரு. கே. பாலசிட்ணர் முன்னிலையில் ஆஜர் செய்தனர். இம்மாதம் 24ம் திகதிக்கு நீதிபதி விசாரணையை ஒத்திவைத்தார்.

## உ[illegible]

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பு சங்கத்திடம் விடப்பட்டுள்ளது. இதன் மூலம் அங்கு ஒருவாறு மீனவர்களை வியாபாரிகள் சுரண்டிச் செல்வது ஒருவாறு தவிர்க்கப்பட்டுள்ளது.

'சுரண்டல்காரர்களினதும் தரகர்களினதும் எதிர்ப்பையும், தடையீட்டையும் முறியடித்து மீனவர்களுக்குச் சுபீட்ச வாழ்வை ஏற்படுத்த வேண்டுமானால் மீனவர்களிடம் கூட்டுறவு மனப்பான்மை பெருக வேண்டும்.

கடற்றொழில் திணைக்கள ஆய்வுகூட ஆராய்ச்சியாளர் திரு. கே. சச்சிதானந்தமும் பேசினார். (த)

## 'நடன, சங்கீத ஆசிரியர்களை நியமிக்கவும்'

யாழ்ப்பாணம், திங்.

'மாணவர்களது உளவளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் உதவிபுரியும் கலைகளுள் சங்கீதம், நடனம் முக்கியமானவை. இக்கலைகளைக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களை உயர்தர வகுப்புக்குத் தந்துதவவேண்டும்' என்றுகோரும்பிரேரணையொன்றும் பராய்சைவத்தமிழ் வித்தியாசாலை மாணவர் கலாமன்றத்தின் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. சிரேஷ்டதலைவர் திரு. இ. சரவணமுத்து தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் திரு. க. கதிரவேல் பேசுகையில் ''புதிய கல்வித் திட்டத்தில் மாணவர் கலாமன்றம் மிக முக்கிய இடம் வகிக்கிறது. கலாமன்றத்தின் வாயிலாக மாணவர்கள் பங்குபற்றி இசை ஞானத்தை வளர்க்கக்கூடிய சங்கீதம், நடனம், சித்திரம் போன்ற கலைகளைக் கற்றுமுன்னேறக்கூடிய வாய்ப்பைக் கல்விப் பகுதி அளித்திருக்கிறது. இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த வேண்டியது ஆசிரியர்கள் மாணவர்களது கடமையாகும்'' என்றார்.

ஆசிரியர் திரு. இ. நாகலிங்கமும் பேசினார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம் ஆண்டு ஜூலை 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanadu P. O. Box No. 49, Jaffna. Telegram "Eelanadu" Telephone: 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org